சொன்னார். அவரைத் தாங்கள் நன்றாக அறிந்தவர். அதைத் தாங்கள் வேறு விதத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு திரையரங்கு கழகத்தின் மூலம் கடன் வழங்கல்.

*வினா எண். 89 திரு. து புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு கூட்டுறவு முறையில் திரையரங்கு அமைப்பதற்கான தமிழ்நாடு திரையரங்கு கழகத்தின் மூலம் கடனுதவி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கூட்டுறவு முறையில் திரை அரங்கு அமைப்பதற்குக் கடனுதவி அளிக்கும்போது படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென தமிழ்நாடு திரையரங்கு கழகத்தை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. திரையரங்கு கழகத்தின் சங்க அமைப்பின் விதிக் குறிப்பில் கண்டுள்ள சங்கத்தின் நோக்கம் பற்றிய விதிகள் திருத்தியமைத்த பிறகு நிதியுதவி வழங்கப்பெறும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகளுக்கு தியேட்டர் கார்ப்பரேஷன் நிதி தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். படித்த பட்டதாரி என்றால் ஆர்ட்ஸ் படித்தவர்களா, சயன்ஸ் படித்தவர்களா, எம்.பி.பி.எஸ்., பி.இ. என்று இப்படிப்பட்ட பட்டதாரிகளுக்கும் கடன் உதவி அளிக்கப்படுகிறதா அல்லது கலைத் துறையில் சினிமாத் துறையில் ஏதாவது பட்டம் படித்தவர்களுக்கு மட்டும் தான் கடன் உதவி அளிக்கப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன். அதைப்போல், கடன் பெறுகிறவர்கள், 'இனிசியல் கேப்பிடல்' முதலீடு எவ்வளவு செலவிட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டு உள்ளதா? இது வரையில் எவ்வளவு பேருக்கு இப்படிக் கூட்டுறவு முறையில் கடன் வசதி செய்யப் பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, பல்கலைக் கழகத்திலே பி.ஏ., எம். ஏ.

போன்ற பட்டங்கள் பெற்றவர்கள்தான் பட்டப்படிப்பு படித்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று இந்த அரசு அந்தக் கழகத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறது. அடுத்தடுத்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, அமைச்சரின் செயலர் அவர்கள் பதிலிலிருந்து அந்தக் கழகம் திரைப்பட அரங்குகளுக்குக் கடன் அளிப்பதற்காக இருக்கிற கார்ப்பரேஷன் என்று தெரிகிறது. இதுவரையில் எத்தனை பேர் கடன் கேட்டிருக்கிறார்கள், மாவட்ட வாரியாக? எத்தனை பேர்களுக்கு திரையரங்கு கட்டுவதற்காகக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இது பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதான கேள்வி. ஆகவே, தயவு செய்து உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, அமைச்சரின் செயலர் அவர்கள் பி.ஏ., எம்.ஏ., படித்தவர்கள் பட்டதாரிகள் என்று சொன்னார்கள். அப்படியானால் பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி., படித்தவர்களை எப்படிக் கருதுவது?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, பி. ஏ., எம். ஏ. போன்ற பட்டப்படிப்பு என்றுதான் குறிப்பிட்டேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, பட்டதாரிகளுக்குத்தான் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படியானால் பட்டதாரி அல்லாதவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்களா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்பது தான் கழகத்தின் நோக்கம். ஆனால் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பது எங்களுடைய கொள்கை.